Downloaded From : http://cbseportal.com/

SET – 4

**Series : GBM/C**

**Code No. 6**

**Roll No.** | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

- Please check that this question paper contains **8** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **9** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer book during this period.

# தமிழ்
# TAMIL

*கால அளவு : 3 மணி* — *மொ. மதிப்பெண்கள் : 100*

*Time allowed : 3 Hours* — *Maximum Marks : 100*

## பகுதி - அ (50 மதிப்பெண்கள்)

1. (அ) கீழ் வருவனவற்றில் எவையேனும் ஐந்து வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக : **5 × 1 = 5**

   (i) கறிகாலன் கருவூர்ச் சென்று கறந்து வாழ்ந்தான்/

   (ii) குலக்கரைக்குச் சென்று துணியில் உள்ள கறையை நீக்கினேன்

   (iii) ஆற்றிள் நீர் கரை புரண்டு ஓடுகிறது.



Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/

(iv) கோழி கூவுமுன் எழுந்து பள் துலக்கு

(v) அதிக ஒளி செவியையும் மிகுந்த ஒலி கண்ணையும் பாதிக்கும்.

(vi) செயற்கை கோல் நிளை நிறுத்தப்பட்டது.

(vii) சொட்டு நீர் பாசன முறையைக் கையால்வோம்.

*(ஆ)* கீழ் வரும் வாக்கியங்களில் எவையேனும் ஐந்து வாக்கியங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக. **5 × 1 = 5**

(i) பித்தளை குடத்தில் நீரை பிடித்து வை.

(ii) கூடா நட்பை தேடாதே! அது தீரா பகையைத் தரும்.

(iii) வந்து பார்த்தேன் வர சொன்னவனை கணோம்.

(iv) நான் செய்யா தவறுக்குத் தண்டனையை பெற்றேன்.

(v) பூ பல்லக்கை சுமந்து செல்பவர் யார்?

(vi) அந்த காசு ஒரு செல்லா காசு

(vii) கடைக்கு சென்று புது துணி வாங்கி வந்தேன்.

*(இ)* கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் ஐந்து வாக்கியங்களைக் கூறியவாறு மாற்றி எழுதுக. **5 × 1 = 5**

(i) ஆசிரியர் இலக்கணம் கற்பித்தார்– (செயல்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக).

(ii) புகழேந்தி அடங்கினான்-(பிறவினை வாக்கியமாக மாற்றுக.)



Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/

(iii) கோவலன் கண்ணகியை நோக்கி, "நான் பொருள் தேட மதுரை சென்று வருகிறேன்." என்று கூறினான். (அயற்கூற்றாக மாற்றுக)

(iv) உழவர்கள் வயலை உழுதனர்; உழவர்கள் பயிர் செய்தனர். – (தொடர் வாக்கியமாக மாற்றுக.)

(v) பாரதியார் பாடல்களை நான் அறிவேன். (பொருள் மாறுபடாமல் எதிர்மறை வாக்கியமாக மாற்றுக.)

(vi) வளவன் பரிசு பெற்றிலன் (உடன்பாட்டு வினையாக மாற்றுக.)

(vii) என்னால் இப்பாடல் எழுதப்பட்டது. (செய்வினை வாக்கியமாக மாற்றுக.)

2. (அ) கீழ்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக : **5 × 2 = 10**

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு'

என்று முழக்கமிட்டவர் கவிஞர் பாரதிதாசனார். அவரது தமிழ் வாழ்வு உணர்ச்சியற்றுக் கிடந்த சமுதாயத்தில் எழுச்சியூட்டியது.

'தமிழுக்கு அமுது' என்று பேர் என முழக்கமிட்ட பாரதிதாசனார் புதுச்சேரியில் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ஆம் நாள் பிறந்தார்.



Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/

'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்ய வேண்டும்' என்று முழக்கமிட்ட பாரதியார், ஒரு திருமண நிகழ்ச்சியில் பாரதிதாசனைக் கண்ட பொழுது, அவரது பெருமையை வெளிப்படுத்த வேண்டி பாடல் ஒன்று பாடுமாறு பணித்தார். அப்போது அவர் பாடிய பாடல்தான் 'எங்கெங்கு காணினும் சக்தியடா, எழுகடல் அவள் வண்ணமடா' என்பதாகும். பாரதியாருடன் ஏற்பட்ட நெருக்கமான தொடர்பு காரணமாக, பராதியார் மீது கொண்ட பக்தியின் மிகுதியால் கனக சுப்புரத்தினம் என்ற தன் பெயரைப் பாரதிதாசன் என்று வைத்துக்கொண்டார்.

குடும்பவிளக்கு, இருண்ட வீடு பாண்டியன்பரிசு, எதிர்பாராத முத்தம், காதல் நினைவுகள், இசையமுது, அழகின்சிரிப்பு, குறிஞ்சித்திரட்டு, தமிழச்சியின்கத்தி, தமிழியக்கம் என்பன பாரதிதாசன் இயற்றிய கவிதை நூல்களாகும். பிச்ராந்தையார், இரணியன் அல்லது இணையற்ற வீரன் என்பன அவரது நாடக இலக்கியங்களாகும்.

வினாக்கள் :

(i) பாரதிதாசனார் எங்கு எப்போது பிறந்தார்? **2**

(ii) 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்ய வேண்டும்' என்ற பாடலை பாடியவர் யார்? அவர் பாரதிதாசனரை எங்கு சந்தித்தார்? **2**

(iii) பாரதிதாசனாரின் இயற்பெயர் யாது? அவர் தன் பெயரை மாற்றிக் கொள்ள காரணம் யாது? **2**



Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/

(iv) அமுது என்று எதற்குப் பெயர்? இரணியன் என்ற நாடக இலக்கியத்தின் வேறுபெயர் யாது? **2**

(v) பாரதிதாசனார் பாடிய கவிதை நூல்கள் நான்கின் பெயர்களை எழுது. **2**

*(ஆ)* குடியரசு தலைவரிடம் நல்லாசிரியர் விருதுபெற்ற நல்லாசிரியர் ஒருவரை நேர்க்காணல் செய்க. **5**

**அல்லது**

கீழ்வரும் பாடலைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

தொன்று தொட்டு வருகின்ற அடிமைப் புத்தி
தொலையட்டும் ! ஆட்டுகின்ற கொடுமை மட்டும்
நின்று விட்டால் ஆடுகின்ற சிறுமை நீங்கும்;
நெருப்பணைந்தால் கொப்பளங்கள் இல்லை என்பேன்;
கன்றுகுரல் கேட்டவுடன் போல மாற்றார்
கதறுவதைக் கேட்டவுடன் அன்பு செய்தால்
வென்றுவரும் மனிதகுலம்! கொல்லுகின்ற
வேற்றுமையைத் தகரித்தெறியும் மனிதநேயம்!

**வினக்காள் :**

(i) ஆசிரியர் எதனை தொலையட்டும் என்று பாடுகின்றார்? **1**

(ii) ஆடுகின்ற சிறுமை எப்போது நீங்கும்? **1**

(iii) எப்படி அன்பு செய்தல் வேண்டும்? **1**

(iv) எதனைத் தகர்தெறிதல் வேண்டும்? **1**

(v) இப்பாடலுக்கேற்ற தலைப்பொன்றினைக் கொடு. **1**



Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/

3. கீழ்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பில் மூன்று பக்க அளவில் கட்டுரை வரைக. **10**

(i) காலம் பொன் போன்றது

(ii) சமச்சீர் கல்வித் திட்டம்

(iii) சுற்றுப் புற தூய்மை

4. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று குறித்துக் கடிதம் எழுதுக. **10**

விளையாட்டுப் போட்டியில் வெற்றிப் பெற்ற உம் நண்பனைப் பாராட்டிக் கடிதம் ஒன்று வரைக.

அல்லது

உம் பகுதிக்கு குடிநீர் வசதி செய்து தரும்படி ஊராட்சி ஒன்றிய தலைவருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக.

*(எக்கடிதமாயினும் உமது முகவரி : இறையன்பு/இளவரசி, 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை-14. எனக் கொள்க)*

பகுதி – ஆ **(50 மதிப்பெண்கள்)**

5. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. **2 × 10 = 20**

(i) வயிற்றுப் பெருமான் பொருட்டு மக்கள் செய்யும் செயல்களாக அறநெறிச்சாரம் கூறுவன யாவை?

(ii) நாடு, சமயம், சாதி இவற்றை அடிப்படையாகக் கொண்டு சமரச உணவர்வினின்று மாறுபடுதல் தவறாம் என்று திரு.வி.க.வாதிடுவதனை விளக்குக.

(iii) இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ் வகைமை குறித்துப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.

(iv) கவிதையின் இயல்பாக மேனாட்டறிஞர்கள் கூறும் கருத்துக்களையும் அவற்றிற்குப் பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை உரைக்கும் மறுப்புகளையும் எழுதுக.



Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/

6. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

**2 × 5 = 10**

(i) செய்ந்நன்றியறிதல் பற்றி வள்ளுவர் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

(ii) வரத நஞ்சையப் பிள்ளை எதனால் தமிழன்னையை 'வாழிய வாழிய' என வாழ்த்துகின்றார்?

(iii) நரிவெரூஉத்தலையார் பயனில்லாத முதுமையுடையாரை விளித்துக் கூறுவனவற்றை எழுதுக.

(iv) மருண்மாலைப் போதில் கண்ணகி நினைத்து ஏங்கி உரைத்தனவும், கோவலனைக் கண்ட பொழுது நிகழ்ந்த அற்புதத்தையும் எழுதுக.

7. கீழ்வரும் செய்யுட் பகுதியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடைதருக. **5**

'தையலை வணங்கற் கொத்த இடைபெறும் தன்மை நோக்கி
ஐய, யான் இருந்த காலை அலங்கல் வேல் இலங்கை வேந்தன்
எய்தினன்; இரந்து கூறி யிறஞ்சினன்; இருந்து நங்கை
வெய்துரை சொல்லச் சீறிக் கோறல்மேற் கொண்டு விட்டான்'

(i) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்எது? ஆசிரியர் யார்? **2**

(ii) இவ்வாறு யார் யாரைப் பார்த்துக் கூறியது? **2**

(iii) 'யான்'—என்ற சொல் யாரை உணர்த்தும்? **1**

அல்லது

'யாரமில்லை தானே கள்வன்
தானது பொய்ப்பின் யாவெனவன் செய்கோ'

(i) இப்பாடல் அடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது? ஆசிரியர் யார்?

(ii) இப்பாடல் எத்திணையைச் சேர்ந்தது? எத்துறையைச் சார்ந்தது?

(iii) 'கள்வன்'—என்ற சொல் யாரை உணர்த்தும்?



Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE

Downloaded From : http://cbseportal.com/

8. ‘மகன்’– இக்தை மாந்தரைப் பற்றி திறனாய்வு செய்து ஒரு முடிவு கூறுக. **10**

**அல்லது**

‘சட்டை’ – இச்சிறுகதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக.

9. மாலதியின் பண்பு நலன்களைக் கூறுக. **5**

**அல்லது**

மூக்கப்பிள்ளை– பாத்திரப் படைப்பை ஆய்க.

---



Downloaded From : http://cbseportal.com/ Courtesy : CBSE